பாட்டு

"செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்தப்பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
அங்கு ஆளுகிறார்.
தீங்கவிரல் பொன்னையா
அதிகாரம் இனி அதிகாரம்
துனிச்சுப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்"

---

அன்னக் கொடித் தாமரை, அறிவுள்ளதேவி 'மாயவர் சொன்ன பிரகாரம், மூன்று மாதம் ஆகிவிட்டது, மாயவரை வரவழைக்க வேண்டு' மென்று, மாயவரை நினைக்கும் போது, மாயவர், உடனே புறப்பட்டு பொன்னிவள நாடு வந்து அரண்மனையில் அமர்ந்தார். எல்லோரும் மாயவரை நமஸ்க்காரம் செய்தார்கள்.

மாயவர்: 'எல்லோருக்கும், மங்களம் உண்டாகட்டும்! தாமரை! என்ன, ஏது காரியமாக அழைத்தாய்?'

தாமரை: 'பரந்தாமா! தாங்கள் மூன்று மாதம் ஆகியதும், குழந்தைக்கு பெயர் சூட்டலாமென்று சொன்னீர்கள்! ஆகையால், தாங்கள் நல்ல நாள் பார்த்து குழந்தைக்கு பெயர் சூட்டுங்கள்.'

மாயவர்: 'சரி! வெள்ளிக்கிழமை, நல்ல நாள் இருக்கிறது,

அதனால், ஆயிரம் கிராமத்துக்கும் அழைப்பு
விட்டு வெள்ளிக்கிழமை நான் வருவதற்குள்
எல்லோரும் செல்லாத்தா கோவிலுக்கு
சென்று, எல்லாக்காரியமும் முடித்து வையு
ங்கள், நான் வந்ததும் பெயர் சூட்டலாம்
என்று சொல்லிவிட்டு மாயவர் புறப்பட்டு
பால்க்கடல் சென்றார். மாயவர் சென்றதும்,
குன்றுடையா ராஜா சாம்புகனை கூப்பிட்டு

'சாம்புகா! ஆயிரம் கிராமத்துக்கும் சென்று,
வெள்ளிக்கிழமை செல்லாத்தா கோவி
லில் குழந்தைகளுக்கு பெயர் சூட்டு
கிறார்கள், என்று சொல்லிவிட்டு; வீடு
திரும்பாமல், செல்லாத்தாளுக்கு பால்க்கொ
ண்டு வரும்படி சொல்லிவிட்டு வா.'

சாம்புகன்: சாமி! நல்லது, என்று வீட்டுக்கு சென்று,
௨௪ முழ வேஷ்டியை எடுத்து உருமாலையாக
கட்டி, மூன்று கட்டு பிடித்த தடியை எடுத்து
தோளில் வைத்து புறப்பட்டான். சாம்புகன்.
(கைத்தடி சாமான்யமல்ல, ஒரு பனைமரத்தை
வெட்டி பனையின் இரண்டு நுனிகளையும் நறுக்கி
விட்டு, மூன்று இரும்புக்கட்டு போட்டது)
சாம்புகன், பொன்னிவள நாட்டை விட்டு
அணியப்பூரை நோக்கிப்புறப்பட்டான்.

பாட்டு

"ஆட்டம் என்சாமி பெருநடையா
ஒருவிரைவாய் சாம்புகன் வாரானே
ஏட்டியே என்சாமி தாண்டுறானே
எட்டு அணைப்பு என்சாமி காதுவழி."

சாம்புகன், அணியப்பூர் வந்து வீதியில் போகும் போது, ஊர் ஜனங்கள் இவனைக்கண்டு இவ்வளவு பெரிய ஆள் இருக்கிறானே! என்று, எல்லோரும் பயந்து நடுங்கினார்கள். சாம்புகன் நடுவீதியில் நின்று, 'சாமி! நான், பொன்னிவளநாடு அரசருடைய முதல் மந்திரி, என்னைக்கண்டு யாரும் பயப்பட வேண்டாம், என் பெயர் சாம்புகன்' என்றான்.

ஊர் காவலன்: 'சாம்புகா! என்ன, சமாசாரம்?'

சாம்புகன்: 'சாமி! நாளைக்கு, வெள்ளிக்கிழமை செல்லாத்தா கோவிலில், அரசருடைய குழந்தைகளுக்கு பெயர் சூட்டுகிறார்கள்! ஆகையால், தாங்கள், வெள்ளிக்கிழமை எல்லோரும் செல்லாத்தாளுக்கு பால்க்கொண்டு வந்து சேருங்கள்,' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் எல்லா கிராமங்களுக்கும் போய் சொல்லிவிட்டு, பொன்னிவளநாடு வந்து, மணிமண்டப வாசலில் நின்று, 'சாமி! ஆயிரம் கிராமத்திலும் வெள்ளிக்கிழமை காலையில் வந்துசேரும்படி சொல்லிவிட்டு வந்தேன்.' என்றான்.

ராஜா: 'சரி, நல்லது!'

காசி

வெள்ளிக்கிழமை, விடிய ஐந்து நாழிகைக்கு தாமரை எழுந்து, மாதர்களை கூப்பிட்டு அரண்மனையை சுத்தம் செய்யச் சொல்லி பல்லக்கை கொண்டு வரச் சொல்லி, வேண்டிய சாமான்களுடன் குன்னுடையா சாமியும், தாமரையும் குழந்தைகளும் பல்லக்கில் ஏறி புறப்பட்டார்கள்.

பாட்டு

"ஆலேலோ என்றல்லவோ
அச்சினமே எடுத்துவாரார்
ஏலேலோ என்றல்லவோ
எடுத்து வாறார் பல்லாக்கை"

செல்லாத்தா கோவில் வந்து பல்லக்கை விட்டு இறங்கி எல்லோரும் காசிக்கரை சென்று நீராடி வருவதற்குள் ஆயிரம் கிராமத்து கவுண்டர்களும் வந்து சேர்ந்தார்கள். பிறகு, குன்னுடையா ராஜா செல்லாத்தாளுக்கு அமுது வைத்துவிட்டு, செல்லாத்தாளுக்கு பால் விட்டு அபிஷேகம் செய்து, அருபூஜை, குருபூஜை, 58. லிங்க பூஜையும் சரியாக முடித்தார். அப்போது மாயவரும் வந்து சேர்ந்தார். செல்லாத்தாளும், மற்றும், அங்கு இருக்கக்கூடியவர்கள் எல்லோரும், மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.]

மாயவர்; எல்லோருக்கும், மங்களம்! உண்டாகட்டும்! என்று சொல்லிவிட்டு அமர்ந்து

[redacted]. 'செல்லாத்தா! கிழக்கு முகமாக உட்கார்! தாமரை! முதல் குழந்தையை எடுத்து, செல்லாத்தாளிடம் கொடு.' செல்லாத்தா குழந்தையை வாங்கி மடியில் வைத்து, மாயவரிடம் 'அண்ணு! இந்தக் குழந்தைக்கு, என்ன பெயர் வைக்கலாம்?'

மாயவர். 'செல்லாத்தா!'

பாட்டு,,

"பொன் உரைத்து பொன் உரைத்து பால்வார்த்து
பொன்னர் என்று செல்லாத்தா பேருவையும்."

செல்லாத்தா. 'அண்ணு! அப்படியே, வைத்து விட்டேன்.'

மாயவர். 'சரி! இரண்டாவது குழந்தையை, வாங்கி மடியில் வைத்து—

பாட்டு,,

"சங்கு உரைத்துப் பால் வார்த்து.
சங்கர் என்று ர·ஷ்பரி பேருவையும்"

செல்லாத்தா. 'அண்ணு! அப்படியே, வைத்து விட்டேன்.'

மாயவர். 'சரி! மூன்றாவது பெண் குழந்தையையும் வாங்கி மடியில் வைத்து—

பாட்டு,,

"சங்குறைத்து பால் வார்த்து.
தங்காள் என்று செல்லாத்தா பேருவையும்"

செல்லாத்தா 'அண்ணா! அப்படியே, வைத்து விட்டேன்.'

மாயவர் 'சரி, நல்லது!'

குழந்தைகளுக்கு பெயர் வைத்து முடிந்ததும் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கினார்கள். கிராமத்துக் கவுண்டர் எல்லோரும், மாயவரிடமும், செல்லாத்தாளிடமும், குன்னுடைய ராஜரிடமும் விடை பெற்று ஊருக்கு சென்றார்கள்.

பிறகு, மாயவர் தாமரையிடம், 'குழந்தைகளை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு சென்று, நன்றாக வளர்த்து' என்று எல்லோரிடமும் விடை பெற்று, பால்கடல் சென்றார்.

குன்னுடையா ராஜரும், தாமரையும், குழந்தைகளை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு சென்றார்கள். சில காலத்தில் குழந்தைகள் வயது வந்தவுடன் குன்னுடையா ராஜர் நாட்டின் பொறுப்பை மைந்தர்களிடம் ஒப்படைத்தார்.

(இனி, பொன்னர் என்பவரை பெரியண்ணசாமி யென்றும், சங்கர், என்பவரை சின்னண்ணசாமி யென்றும் அழைப்போம்.)] p.168

p.169 [பெரியண்ணசாமியும், சின்னண்ணசாமியும் நாட்டை ஆண்டு வந்தார்கள்.

327,

பாட்டு.

"செங்கோலும் பொன்னையா
அதிகாரம் இனி அதிகாரம்.
செலுத்திப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
தங்க விரல் பொன்னய்யா
அதிகாரம் இனி அதிகாரம்.
தனிச்சுப்பட்டம் ராஜர்கள்
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
தங்கமிஞ்சி காரர்கள் இனி காரருகள்
தரணி பட்டம் பூமியிலே
ஆண்டவர்கள் அங்கு ஆண்டவர்கள்.
பொன்னுமிஞ்சி காரருகள் இனி காரருகள்
பூமி பதி நாட்டிலே ஆண்டவர்கள்
அங்கு ஆண்டவர்கள்.
மாதமுன்று பொன்னய்யா
மழை பெயும் அங்கு மழைபெயும்.
வருஷம் ஒரு நாட்டிலே
கல்மாரி அங்கு கல்மாரி."

வசனம்.

"சாய்ந்து மேழி பிடித்து உழுகும் தங்க வெள்ளாளன் தன்னரசு; கோண மேழி பிடித்து உழுகும் கொங்கு வெள்ளாளன் தன்னரசு கட்டுக்களங் காணும் கருதுளிர்க்க நெல்க் காணும்."

இந்தப்பிரகாரம், பொன்னிவள நாட்டில் குன்னு டையாக்கவுண்டர் மைந்தர்கள் பெரியண்ண சாமியும், சின்னண்ண சாமியும் நாட்டைஆண்டு வரும் போது. ஒருநாள்; இருவரும் பகடை விளையாடும் போது, மாயவரும் இவர்களுடன் சேர்ந்து மூன்று பேரும் பகடை விளையாடினார்கள். மைந்தர்கள் இருவரும், ராஜ்யம் ஆண்டு வருவதை. தாமரை பார்த்து. ~~இன்பம்~~ மனம் குளிர்ந்து இருதோளும் பூரித்து. சந்தோசமடைந்தாள்.

பாட்டு

"இந்த நல்லோ பிரகாரம் இனிப்பிரகாரம்
நடக்குது பார் சாமியுட
அதிகாரம் இனி அதிகாரம்.
அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று,
அன்புடனே நடக்குதுபார்
அதிகாரம் இனி அதிகாரம்"

---

ஒருநாள், தாமரை மைந்தர்கள் இருவரையும் கூப்பிட்டு, 'அப்பா, குழந்தைகளே! எங்களுக்கு வயதாகி விட்டது, நாங்கள் காலமாகி தெய்வசபை செல்வதற்குள், உங்கள் இருவருக்கும் திருமணம் செய்துவிடலாம் என்று நினைக்கிறேன்; இதைகேட்பதற்குத்தான்

உங்களைக் கூப்பிட்டேன், என்று, சொல்லவும்.
சாமிகள், இருவரும் 'அம்மா! எங்களுக்கு
இப்போது கல்யாணம் வேண்டா' மென்று,
சொல்லி விட்டு இருவரும் பகடை விளை
யாடச் சென்று விட்டார்கள்.

தாமரை: பாட்டு,,

"கழுத்து நம்போ கழுத்து நம்போ
மாலையிட்டு அங்கு மாலையிட்டு,
கடக்க நின்று கடக்க நின்று
பார்க்கிலையே அம்மா பார்க்கிலையே
தோளு நம்போ சாமிக்கு
மாலையிட்டு அங்கு மாலையிட்டு
தூர நின்று தூர நின்று
பார்க்கலையே அய்யோ பார்க்கலையே.
அதுக்கு நல்லோ அதுக்கும்
குறைகள் செய்தேன் இனி குறைகள் செய்தேன்
அத்தினைக்கும் நாட்டிலே p.169
p.170 தீமை செய்தேன் அங்கு தீமை செய்தேன்"

வசனம்:

'அய்யோ! மாயவனே! நாங்கள் சாவதற்குள்
மைந்தர்களுக்கு கல்யாணம் செய்யாமல்
இறந்து விட்டால், உலகத்திலே, எங்களை
ஏசுவார் சிலகோடி, பேசுவார் சிலகோடி!
என்று தாமரை துயரப்பட்டு, சாப்பிடாமல்

உறங்காமல் கவலைப்பட்டு இருந்தாள்.

பாட்டு

"அப்படியே நல்லதென்று அங்கு நில்லதென்று
அன்புடனே நடக்குதுபார் இனி நடக்குதுபார்
இந்த நல்லோ பிறகாரம் இனி பிறகாரம்
இனி நடக்குதுபார் அதிகாரம்
இனி அதிகாரம்"

- - - - - - - - -

சின்னண்ணசாமியும், பெரியண்ணசாமியும், ஒருநாள், பகலை விளையாடி விட்டு வந்து சாப்பிட்டு விட்டு.

சி.சாமி. 'அடி, குப்பி! தாய், தந்தை இருவரும் சாப்பிட்டு விட்டார்களா?'

குப்பி. 'சின்னராஜாவே! அப்பா, இப்போதுதான் சாப்பிட்டு விட்டு பஞ்சணைமெத்தைக்கு சென்று விட்டார்; நும், தாயார் பத்து நாட்களாக சரியாக சாப்பிடுவதில்லை' என்று சொல்லவும்.

சாமிகள் இருவரும், ரேணிப்பட்டகசாலைக்கு சென்று, தாயாரைக்கண்டு 'அம்மா! நீங்கள் பத்து நாட்களாக, சரியாக சாப்பிடவில்லை. என்று குப்பி சொல்கிறாள், ஏன்? என்ன, கவலை?'

தாமரை. 'சாமி! உடம்பு, செளக்கியமில்லாமல் இருப்பதால் சாதம் சாப்பிட முடியவில்லை.'

சி.சாமி. 'அம்மா! நீங்கள், பொய் சொல்கிறீர்கள், நாங்கள் கல்யாணம் வேண்டாமென்று

சொன்னதற்குத்தானே, கவலைப்பட்டுக் கொண்
டிருக்கிறீர்கள்? தாயே! இதற்காக நாங்கள்
கவலைப்படவேண்டாம், உங்கள் இஷ்டம்போல்
கல்யாணம் செய்து கொள்கிறோம்; ஆனால்,
பெண், எங்கே இருக்கிறது?'

தாமரை. 'சாமி! வாளவந்தி நாட்டில், உன் மாமன் வீட்டில்
இரண்டு பெண் இருக்கிறது.'

சி. சாமி. 'அம்மா! எங்களுக்கு மாமன்மார்கள் எத்தனை
பேர் இருக்கிறார்கள்?'

தாமரை. 'சாமி! வாளவந்தி நாட்டில், என் அண்ணன்
மார்கள் மரிக்கொழுந்தா கவுண்டர், சிவக்கொ
ழுந்தா கவுண்டர் இருவர் உங்களுக்குத்தாய்
மாமன் மார்கள் இருக்கிறார்கள் அவர்கள்
பெண்கள்தான் நான் சொன்னது.'

சி. சாமி. 'அம்மா! உங்களுக்கும், மாமன் மார்களுக்
கும், ஏதாவது, மன விரோதமா?'

தாமரை. 'சாமி! நம்மளுக்கும், மாமன்மார்களுக்கும்,
கொஞ்சம் விரோதம்தான்.'

சி. சாமி. 'அம்மா! அப்படியா! நான் இப்பொழுதே சென்
று, அவர்கள் இருவரையும் கொன்று வரு
கிறேன்' என்று, கோபத்துடன் எழுந்தார்.

தாமரை. 'என்ன சாமி! பொறு, வேண்டாம் அவர்கள்
செய்த வினையை அவர்களே அனுபவிக்
க வேண்டும், அவர்கள் அரண்மனைக்கு

நீங்கள் போக வேண்டாம், என்னை உன் அப்பா
கல்யாணம் செய்யும் போது, மாயவர் வந்து
வாள வந்தி நாடு பிள்ளையார் கோவிலில்
வைத்து கல்யாணம் செய்து வைத்தார், அதன்
பிறகாரம் உங்களுக்கும், பிள்ளையார் கோவி
லில் வைத்துக் கல்யாணம் செய்து வைக்
கிறேன், பெண்கள் இரண்டையும் பிள்ளையார்
கோவிலில் கல்சிலையாக செய்து வைத்
திருக்கிறேன்.' ] P. 170

(17) [சி. சாமி: 'தாயே! நல்லது! கல்யாணத்துக்கு ஏற்பாடு
செய்யுங்கள், ஆனால், ஒரு விஷயம்,
நான் பெண்ணிடம் கைகோர்வை யிடும்
போது, என் விரலைக் கொடுக்க மாட்டேன்
என் வீரியம் குறைந்து விடும், ஆகையால்
எனக்கு தங்கத்தாலும், வெள்ளியாலும்,
~~நீங்களுக்கு~~ விரல்கள் செய்து வையுங்
கள்; மேலும், எனக்கு சீர் ஒன்றும் வேண்
டாம் முகூர்த்த நேரத்தில் தான் நான்
வருவேன், வந்துபின் அவள் முகத்தை
நான் பார்த்து மாலை சூட மாண்டேன்,
இருவருக்கும் இடையில் திரைக்கட்டி
வைக்க வேண்டும், திருமணம் செய்தபின்
னும், ~~நாங்கள்~~ நான் அவள் முகத்தில் விழிக்க
மாட்~~டோம்~~டேன், அவர்கள் இருவரையும்

கொண்டுவந்து செல்லாண்டிக்கா மாளிகையில் போட்டு சிறை வைக்கவேண்டும், அவள் என் எதிரில் வந்தால் வெட்டி விடுவேன்; அண்ணனுக்கு வேண்டுமானால், காராளனுக்கு செய்ய வேண்டிய சீர்முறை எல்லாம் செய்து திருமணம் செய்யுங்கள்; இதுவே, என் முடிவு."

தாமரை: "சாமி! அப்படியே நல்லது, என்று குன்னுடையா ராஜரிடம் சென்று, கல்யாணம் செய்து கொள்வதாக ஒப்புக் கொண்டார்கள் திருகல்யாணம் எப்போது வைக்கலாமென்று, இருவரும் கலந்து பேசி, குறிப்பிட்ட தேதியை வைத்து, ஆசாரிகளை கூப்பிட்டு மாங்கல்யம், வெள்ளியினால் விரல்கள், எல்லாம் செய்யச் சொன்னார்கள். பிறகு, அரசருக்கெல்லாம் ஓலை அனுப்பி, கிராமக் கவுண்டர்களையும் அழைத்து, குறிப்பிட்ட நாளில் பல்லக்குகள் அலங்காரம் செய்து எல்லோரும் புறப்பட்டார்கள். குன்னுடையா ராஜர், தாமரை, பெரியண்ண சாமி எல்லோரும் பல்லக்கில் ஏறி புறப்பட்டார்கள். மற்றும், குடிபடைகள் எல்லோரும் புறப்பட்டார்கள். மாதர்கள் சேவகர்கள் எல்லோரும் பல்லக்கை எடுத்து தோளில் வைத்து வளவந்தி நாட்டை நோக்கி புறப்பட்டார்கள்.

பாட்டு

"ஆலேலோ என்றல்லோ பல்லாக்கை
அச்சினமே எடுத்து வாரார்.
ஏலேலோ என்றல்லவோ
எடுத்து வாரார் பல்லாக்கை
ஐம்பத்தாறு தேச அரசர்களும்
அன்புடனே வருகிறார்கள்
கிராமத்துக் கவுண்டர்களும்
இன்பமுடன் வருகிறார்கள்
வாளவந்தி நாடு தேடி
வருகிறார்கள் எல்லோரும்"

எல்லோரும் வாளவந்தி நாடு போய், பிள்ளையார் கோவிலில் இறங்கினார்கள். தாமரை வடக்கு முகமாக மண்டியிட்டு, ஒரு கால் தண்டி வாங்கி, தெய்வ சபையை நினைத்து, வாசு தேவரை நினைத்து, வருண தேவரை நினைத்து, 'ஆபத்து பாந்தவா! அனாதரக்ஷகா! மாயவரே! நான் ஈஸ்வரன் இருப்பிடயில் பிறந்தது உண்மையானால்! என் குழந்தைக்கு திருமணம் செய்வதற்கு தங்களுடைய கிருபையால், யாக சாலையும், மற்றும் வேண்டிய ஏற்பாடுகள் உடனே நடக்க வேண்டும், காந்தி நாதா!' என்று மாயவரை நினைத்து வருந்தும் போது; மாயவர் கண்டு விபூதியை வீசி மாயையில் யாக சாலையும் வேண்டிய ஏற்பாடுகள்

அந்திரமாக நடந்தது. பிறகு, தாமரை பெண்களின்
சிலை அருகில் வந்து நின்று, குதண்டுகளையும்,
வண்டுகளையும், தெய்வ சபைக்கு அனுப்பிவிட்
டு. சங்கு சக்கரா! வைகுந்த வாசகா! பரந்தா
மா! பண்டர்பதி நாதா! பூபாலகா! இந்தக்கல்
சிலை இரண்டும், பெண்ணாக மாற வேண்டும்
காஞ்சி நாதா! என்றதும், மாயவருட கிரு
பையால், கல்சிலை பெண்களாக மாறி
யது. தாமரை பெண்களை கூப்பிட்டு, ஆடை
ஆபரணம் கொடுத்து, அலங்காரம் செய்து,
இரண்டு பெண்களை கூப்பிட்டு துணை நிறுத்
திவிட்டு, பெரியண்ண சாமிக்கு சீர் ஆர
ம்பம் செய்தார்கள். மேளவாத்தியங்கள்
முழுங்கியது. காரணுக்கு செய்ய வேண்
டிய சீர்கள் எல்லாம் நடந்தது. இப்படி,
இங்கு நடந்து கொண்டிருக்கும் போது.
பொன்னிவள நாட்டில், வெள்ளி உதித்து வெண்
கோழி கூவுமுன் சின்னண்ணசாமி எழுந்து
குளித்து அலங்காரம் செய்து வெளியில்
வந்து நின்று. 'அடே சாம்புகா!' என்று கூப்
பிட்டதும். சாம்புகன் ஓடிவந்து. நமஸ்க்
காரம் செய்தான்.

சாம்புகன் 'சாமி! ராஜாவே! என்ன சமாச்சாரம்?'
சி.சாமி 'அடே! நாம், இருவரும் வாள வந்தி நாடு

போக வேண்டும், நீலாவை சீனிவைத்து அலங்காரம் செய்துவை, நான் போய் அலங்காரம் செய்து வருகிறேன்' என்று, உள்ளே சென்று தெய்வ பூஜைகள் முடித்து, சாப்பிட்டு விட்டு, கச்சி கட்டும் மாளிகைக்கு சென்று—

பாட்டு

"சீட்டி சீட்டி தலப்பாவாம்
செண்டு கட்டும் என்சாமி முண்டாசாம்
கட்டு கட்டு வருக்கங்களும்
கனிவர்க்கம் என்சாமி சோடிக்குதாமே.
ஈட்டி ஈட்டி வருக்கங்களும்
எதிர் வர்க்கம் என்சாமி சோடிக்குதாரே.
பட்டு பட்டுத் துலங்குறது
பகவானை என்சாமி மறைக்குது பார்
பொட்டு பொட்டுத் துலங்குறது
பொழுதை என்சாமி மறைக்குது பார்"

இன்னண்ண சாமி, கட்டு வர்க்கம் கனிவர்க்கம் கட்டி, ஈட்டி வர்க்கம் எதிர் வர்க்கம் சோடித்து, பொன்னுருக்கி மாளிகைக்கு சென்று, கத்தி எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு, 'அடி குப்பி! இங்கே வா! அரண்மனையை பார்த்துக் கொள், நான் சீக்கிரம் வந்து விடுகிறேன்' என்று, வெளியில் வந்து பாரா சேவகனிடம், 'அரண்மனையை

ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளுங்கள், நான் வாள வந்தி நாடு போய் விட்டு சீக்கிரம் வருகிறேன் என்று, சொல்லி விட்டு.

/ அடே சாம்புகா! நீ, என் பின்னால் தொடர்ந்து சீக்கிரம் வந்து சேரவேண்டும் என்றார்.

சாம்புகன்: சாமி! நல்லது!

சின்னண்ண சாமி நீலாவின் மேல் ஏறி லகானை கையில் பிடித்தார்.

பாட்டு

"ஏறினார் என் சாமி நீலாவில்
எடுத்துபிடித்தார் என் சாமி பொன் சவுக்கை
தாண்டினார் என் சாமி நீலாவில்
துனிச்சடிச் சார் என் சாமி ரண சவுக்கில்

p.173 வலது காலு என் சாமி மெட்டியதும் P172
வைகுந்தம் நீலா பறக்குது பார்
இடது காலு என் சாமி மெட்டியதும்
தெய்வலோகம் நீலா பறக்குது பார்
வாளவந்தி என் சாமி நாடுதேடி
வருகிறார் என் சாமி சிங்கருதான்."

சின்னண்ண சாமி நீலாவில் வரும் வேகம், அண்ட லோகம் கிடுகிடு வென்று நடுங்கியது.

வாளவந்தி நாட்டில் சின்னணசாமி வரும் செய்கை தெரிந்து எல்லோரும் தயாராய் நின்றார்கள்.

சின்னண்ண சாமி வளநாடு போய் நீலாவை விட்டு கீழே இறங்கியதும், பின்னால் சாம்புகனும் வந்து சேர்ந்தான்.

சி. சாமி: 'அடே, சாம்புகா! நீலாவை பிடித்துக் கட்டிவிடு' என்று யாகசாலைக்குள் நுழைந்தார். 'அம்மா! எல்லாம் தயாராக இருக்கிறதா?'

தாமரை: எல்லாம் தயாராக இருக்கிறது! உன்னை, எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தோம்; வா! மணவறைக்கு போகவா' மென்று சாமியை கூட்டிப்போய் மணவறையை சுற்றி வந்து மணவறையில் கிழக்கு முகமாக உட்கார வைத்தார்கள். பிராமணர்கள் மந்திரம் சொல்லி, ஹோமம் வளர்த்தினார்கள். பிறகு, சின்னண்ண சாமி, பெரியண்ண சாமி அவர் முன், திரை கட்டி, திரைக்கு பின்புறம் பெண்களை நிறுத்தி, பிராமணர்கள் மாங்கல்யத்தை எடுத்து இருவர்கள் கையிலும் கொடுத்தார்.

சாமி இருவரும், மாங்கல்யத்தை வாங்கி பூமியை பார்த்த கண், மேலே நிமிர்ந்து பார்க்காமல், பெண்களுக்கு மாங்கல்யம் கட்டினார்கள். பிறகு, இருவருக்கும் வெள்ளியினால் செய்த கை, விரல்களை கொடுத்து அணிய செய்து, பெண்ணை கைகோர்த்து மணவறையை சுற்றி வந்து கைகோர்வையை எடுத்தார்கள்.

முகூர்த்தும் முடிந்ததும், இன்னண்ண சாமி தாமரையிடம் வந்து. 'அம்மா மணி, செய்யவேண்டிய சீர் இருந்தால், அண்ணருக்கு செய்து கூட்டி வாருங்கள், நான் புறப்படுகிறேன்' என்று வெளியில் வந்து அடே! சாம்புகா! நீலாவை கொண்டுவா என்று நீலாவில் ஏறினார்.

பாட்டு

"வாள வந்தி நாடு விட்டு நாடு விட்டு
வருகுது பார் என் சாமி நீலாவும்.
பொன்னிவள நாடுதேடி நாடுதேடி
வருகுதே என் சாமி நீலாவும்."

சாமி அரண்மனை வந்து இறங்குவதற்குள், சாம்புகனும் வந்து சேர்ந்தான்.

சி. சாமி: 'சாம்புகா! நீலாவைக் கட்டி விட்டு, நீ, போய் பிள்ளையார் கோவிலில் நின்று, பெண், மாப்பிள்ளை வந்ததும்; பெண்கள், இருவரையும் கூட்டிப்போய் செல்லரிக்கா மாளிகையில் போட்டு, அவர்களுக்கு சாப்பாடு, தண்ணீர், மற்றும் எல்லாவசதியும் செய்து கொடுத்து, அவர்கள் வெளியில் வராமலிருக்கும்படி செய்துவிட்டு வந்து சேர்.'

சாம்புகன்: 'ராஜாவே! நல்லது! என்று, பிள்ளையார்

கோவிலுக்கு வந்து, சிறிது நேரத்தில் பெண் மாப்பிள்ளை மற்றும் எல்லோரும் வந்தார்கள். சாம்புகன், பெண்கள் இருவரையும் கூட்டிப்போய் சின்னண்ண சாமி சொல்லியபடி, செல்லாண்டிக்கா மாளிகையில் போட்டு வேண்டிய வசதியை செய்து விட்டு, பிறகு எல்லோரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.] p.173 p.174 [அரசர்களும், கிராமத்துக் கவுண்டர்களும், சாப்பிட்டு தாம்பூலம் போட்டு, குன்னுடையா சாமியிடமும் தாமரையிடமும் விடைபெற்று, அவரவர்கள் ஊருக்கு சென்றார்கள். சின்னண்ண சாமியும், பெரியண்ண சாமியும், பகடை விளையாடச் சென்றார்கள்.

பாட்டு

"செங்கோலு பொன்னய்யா
அதிகாரம் இனி அதிகாரம்.
செலுத்திப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
தங்க விரல் பொன்னய்யா
அதிகாரம் இனி அதிகாரம்.
துனிச்சப்பட்டம் ராஜர்
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்."